புனர்வாழ்வு பணியகம் - 2024
---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

புனர்வாழ்வு பணியகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பணியகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பணியகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பணியகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பணியகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பணியகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பணியகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு பணியகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பணியகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பணியகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பணியகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	சேனபுர மற்றும் கந்தக்காடு புனர்வாழ்வு நிலையம் இரண்டிலும் 02 சிறைக்கூடங்களை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தகார நிறுவனத்திற்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 545,490 தொகை மீளாய்வாண்டின் நிதி	2025 பெப்ரவரி 27 ஆந் திகதி நிர்மாண நிறுவனத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் 2025 ஆம் ஆண்டில் கட்டிடக் கணக்கில் செலவு வைத்து சரி	மேலதிக செலுத்துதல்கள் நடைமுறைச் சொத்தாகக் கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

	நிலமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் பெற வேண்டிய பெறுமதியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த இரண்டு நிர்மாணங்களுக்காக மேலதிகமாக செலுத்தப்பட்ட பெறுமதி கட்டிடக் கணக்கில் வரவு வைக்கப்பட்டமையால் அப்பெறுமதியால் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	செய்யப்பட்டுள்ளது.	
(ஆ)	பிரதான அலுவலகம் அமைந்துள்ள கட்டிடம் வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்காக செலுத்தப்பட்ட பாதுகாப்பு வைப்புத் தொகையான ரூபா 5,832,000 நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்படாது இருந்ததுடன் அது குறிப்புக்களின் மூலம் காண்பிக்கப்பட்டிருந்தது.	2023 ஆம் ஆண்டில் பணியகம் கையேற்பதற்கு முன் செலுத்தப்பட்ட தொகையாக இருந்தமையால் நடைமுறைச் சொத்தாக காண்பிக்க முடியாது இருந்ததுடன் அந்த தொகை திறைசேரிக்கு செலுத்த வேண்டியிருந்தமையால் குறிப்புக்களின் மூலம் மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது.	பாதுகாப்பு வைப்பு நடைமுறைச் சொத்தாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(இ)	சமூக மயமாக்கல் புனர்வாழ்வு நபர்களுக்காக பகிர்ந்தளிப்பதற்கு 2024 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டு பகிர்ந்தளிக்கப்படாது இருந்த பொருட்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 3,614,459 மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருப்புப் பெறுமதியில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் நாட்குறிப்புக்களின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	பகிர்ந்தளிக்கப்படாமல் நிறுவனத்தில் காணப்படுகின்ற இருப்புக்கள் நடைமுறைச் சொத்தாக இனங்காணப்படல் வேண்டும்.
(ஈ)	2014 ஆம் ஆண்டில் கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்திற்காக மின்சாரம் பெற்றுக் கொள்வதற்காக செலுத்தப்பட்ட ரூபா 19,133,235 தொகை நடைமுறையல்லாச் சொத்தாக மூலதனமாக்கப்படாது இருந்ததுடன் பாதுகாப்பு வைப்புத் தொகையான ரூபா 1,000,000 நடைமுறைச் சொத்தின் கீழ் இனங்காணப் பட்டிருக்கவில்லை.	மின்சார வழங்கலைப் பெற்றுக் கொள்ளும் செலவினம் 2025 ஆம் ஆண்டில் நடைமுறை அல்லாச் சொத்தாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் பாதுகாப்பு வைப்பு செலுத்தப்பட்டமைக்கான மூல பிரதி காணப்படாமையினால் நடைமுறைச் சொத்தின் கீழ் கணக்கீடு செய்ய	பாதுகாப்பு வைப்பு நடைமுறைச் சொத்தாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

		முடியாது இருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.	
(உ)	வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட 04 செயற்திட்டங்களுக்காக ஆண்டில் செலுத்தப்பட்ட முகாமைத்துவக் கட்டணமாக கட்டிடங்கள் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்ட ரூபா 1,426,621 மூலதன செலவினமாக கட்டிடக் கணக்கில் வரவு வைக்க வேண்டியிருந்த போதிலும் ஏனைய செலவினக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டில் சரி செய்யப்படும்.	முகாமைத்துவக் கட்டணம் மூலதனமாக்கப்படல் வேண்டும்.
(ஊ)	மூலதன மானியக் கணக்கில் கட்டிடம் என்ற பெயரில் சீராக்கப்பட்டிருந்த ரூபா 258,958,663 பெறுமதியான 04 பெறுமதிகள் தொடர்பாக பெறுமதியை உறுதிப்படுத்தி கொள்ளும் வகையில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 262,890,731 ஆகும். அதன் பிரகாரம் கட்டிட பெறுமதி உரிய பதிவேடுகள் மற்றும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட பெறுமதிகளுக்கு இடையே ரூபா 3,932,068 வேறுபாடு காணப்பட்டது.	2025 ஆம் ஆண்டில் மூலதனமாக்கப்பட்ட அதற்குரிய பெறுமானத் தேய்வு சீராக்கமும் மேற்கொள்ளப்படும்.	சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

1.5.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

	விடயம்	நிதிக் கூற்றுக்களின் பிரகாரம்	தொடர்புடைய பதிவேட்டின் பிரகாரம்	வேறுபாடு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
		ரூபா	ரூபா	ரூபா		
(அ)	காகிதாதிகள் இருப்பு	35,350,452	36,360,948	(1,010,496)	தற்போது சரி செய்யப்பட்டுள்ளது.	சரியான இருப்புப் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	எரிபொருள் மற்றும் உராய்வு மொத்த பெறுமதி	179,819,303	176,330,279	3,489,024	சரிசெய்யும் போது உரிய பிரகாரம் இராணுவ வழங்கல் மற்றும் போக்குவரத்துப் பணிப்பாளர் சபையினால் நாளது	இணக்கம் செய்து சரியான பெறுமதியை இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

					வரையாக்காமையின் அடிப்படையில் பரஸ்பர வேறுபாடு ஏற்பட்டுள்ளது.	
(இ)	உராய்வு மற்றும் எரிபொருளுக்காக செலுத்த வேண்டிய பெறுமதி	14,729,779	44,014,182	29,284,403	பணியகத்தின் தேவைக்காக வழங்கப்படுகின்ற எரி பொருள் மற்றும் உராய்வு எண்ணெய்களை உள்ளடக்கிய அறிக்கை இராணுவத்திற்கு சமர்ப்பிக்கப் படுவதுடன் அப் பெறுமதி உரிய பிரகாரம் இராணுவத்தின் மூலம் நாளது வரை யாக்காமையின் அடிப்படையில் பரஸ்பர வேறுபாடுகள் ஏற்பட்டிருந்தது.	இணக்கம் செய்து சரியான பெறுமதியை உறுதிப் படுத்தி கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

	விடயம்	தொகை ரூபா	சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிலையான சொத்துக்கள்	24,734,718	சொத்துக்கள் பதிவேடு	கட்டிடப் பெறுமதி ரூபா 1,248,788 அதிகரித்து மூலதனமாக்கப்பட்டதுடன் அது 2025 ஆம் ஆண்டில் சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் 2010 – 2014 இல் மேற்கொள்ளப்பட்ட மிகுதி செலவினங்களுக்காக வரிசை அமைச்சு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளமையும் அதற்குரிய ஆவணங்கள் அமைச்சிடம் உள்ளதாக	நிலையான சொத்துக்களின் பெறுமதியை உறுதிப் படுத்துவதற்கான உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

				அறிவிக்கப்பட்டுள்ளது.	
(ஆ)	இருப்புக்கள்	46,895,368	இருப்பு மீள் மதிப்பீட்டு அறிக்கை	எஞ்சிய காலப் பகுதிக்காக இருப்பு மீள் கணிப்பீடு மேற்கொள்ளப்படும்.	இருப்பு மீள் கணிப்பீடு மேற்கொண்டு இருப்பு பெறுமதி உறுதிப்படுத்தப் படல் வேண்டும்.

1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தி	உபாய வழித் திட்டம் ஒன்று தயாரித்து வரிசை அமைச்சின் செயலாளர் ஊடாக திறைசேரி செயலாளர் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் அல்லது தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் பணியகத்தால் அவ்வாறான உபாய வழித் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.	வரைவு தயாரிக்கப் பட்டுள்ளதுடன் ஆளுகைச் சபை அங்கீகாரத்தை பெற்று சமர்ப்பிக்கப்படும்.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2021 நவம்பர் 16 ஆந் திகதிய அரசாங்கத்திற்கு சொந்தமான தொழில் முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கைநூலின் 6.6 ஆம் பந்தி	நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வழங்க வேண்டியிருந்த போதிலும் அக் கணக்காய்விற்கு 2025 ஏப்ரல் 17 ஆந் திகதியே சமர்ப்பிக்கப் பட்டிருந்தது.	கணக்கு தயாரிக்கப் பட்டிருந்த போதிலும் ஆளுகைச் சபை நடவடிக்கைகள் கைவிடப் பட்டமையின் காரணமாக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாது இருந்தது.	வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	**பெறுகைகள் வழிகாட்டிக் கோவை**			
(i)	4.2.1(ஆ) பந்தி	பிரதான பெறுகைத் திட்டத்தில் ஆகக் குறைந்தது 03 வருட காலத்திற்காக எதிர் பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகளுக்காக	எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படும்.	பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்

		பட்டியல் இடவேண்டி இருந்த போதிலும் பணியகத்தால் 2024 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட பிரதான பெறுகைத் திட்டத்தில் 2024 ஆம் ஆண்டுக்கு உரிய பெறுகை நடவடிக்கைகள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தது.		வேண்டும்.
(ii)	4.2.2(அ) பந்தி	ஒவ்வொரு பெறுகை ஆரம்பத்தில் இருந்தும் இறுதி வரை ஒவ்வொரு செயற்பாடுகளிலும் நடவடிக்கைகள் ஒழுங்கு முறையான விபரங்களுடன் பதிவேடு ஒன்று பணியகத்தால் 2024 ஆம் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.	வழிகாட்டியின் பிரகாரம் எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 72,013,067 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 66,389,263 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 5,623,804 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மானியப் பெறுவனவுகள் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	2023 இன் 02 ஆம் இலக்க புனர் வாழ்வு பணிக சட்டத்தின் 4(ஆ) பந்தியின் பிரகாரம் சிகிச்சைகள் மற்றும் புனர்வாழ்வை கோரியவர்களுக்காக அந்த சேவையை வழங்கும் பணியகத்தின் பணி மற்றும் இலக்கிற்கு உள்ளடக்க வேண்டியிருந்த போதிலும் 2024 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அதனை உள்ளடக்கி அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	சுயமாக புனர் வாழ்வு அளிப்பதற்காக அனுப்பப்படுகின்ற புனர்வாழ்வு நலனாளிகளுக்கு புனர்வாழ்வு நிலையம் ஒன்றை புதிதாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அங்கீகாரம் கிடைத்த பின்னர் புனர்வாழ்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.	நிறுவனத்தில் எதிர்பார்க்கப்பட்ட பணிப் பொறுப்புக்கள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கி அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	2024 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 86,564,294 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த 05 பணிகளில் எந்த ஒரு பௌதீக மற்றும் நிதி செயல் முன்னேற்றமும் அடையப்பட்டிருக்கவில்லை.	உரித்து அல்லாத பதில் வழங்கப்பட்டிருந்தது.	திட்டமிடப்பட்ட பணிகளை எதிர்பார்த்த பிரகாரம் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2024 ஆம் ஆண்டில் கைதிகளுக்காக தொழிற் பயிற்சி பாடநெறிகள் 13 நடாத்தப்பட்டிருந்நததுடன் அதற்காக ரூபா 11,169,157 செலவினம் செய்யப்பட்டிருந்தது. ஆண்டில் தொழில் பயிற்சி பாடநெறிகளைப் பெற்ற 314 கைதிகளாக இருந்த போதிலும் பயிற்சிக்கு உரிய தொழில் வாய்ப்புக்கள் ஈடுபடுகின்றவர்களின் எண்ணிக்கை 36 அதாவது 11.5 சதவீத குறைந்த பெறுமதியாக இருந்தது.	முன்னைய தொழில் வாய்ப்புக்களுக்காக அனுப்புதல் தொழில் பயிற்ச்சிக்குரிய தொழில் வேலை வாய்ப்புக்கள் குறைவடைவதற்கு காரணமாக இருந்ததுடன் நாளாந்த வாழ்க்கைக்கு தனியார் அபிவிருத்தி செய்வதற்கான தொழில் வாய்ப்பு வசதிகளை பூரத்தி செய்வதற்கு பாட நெறி காரணமாக இருந்தது.	எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	2024 ஆம் ஆண்டில் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 820 ஆக இருந்த போதும் மீண்டும் போதைப் பொருள்களுக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை 134 உம் மீண்டும் சிறையில் இடப்பட்டவர்களின் எண்ணிக்கை 27 உம் ஆகும். ஆண்டில் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக அரசாங்கம் செலவிட்ட மொத்த செலவினம் ரூபா 591,807,915 ஆக இருந்த போதிலும் கைதிகளைப் புனர் வாழ்வு அளித்தல் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் இதன் பிரகாரம் உரிய பிரகாரம் நிறைவேற்றப்படாமை அவதானிக்கப்பட்டது.	புனர் வாழ்வு அளித்து மீண்டும் அவர்களுக்கு அந்த சூழலில் விடுவிப்பதற்கு ஏற்பட்டமை அதற்கு தாக்கமளித்து இருந்தது.	பின்தொடர் நடவடிக்கைகளை அமுல்படுத்துதலை அதிகரித்தல் வேண்டும்.
(உ)	பணியகத்துக்குச் சொந்தமான டிபன்டர் வாகனம், ஜீப் வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் விற்றுத் தீர்ப்பதற்கு மெய்மையாய்வு சபை பரிந்துரை செய்திருந்த போதிலும் அதற்குத் தேவையான நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஆளுகைச் சபை பரிந்துரை சமர்ப்பிக்குமாறு அமைச்சின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் புதிய ஆளுகைச் சபை நியமித்தல் தாமதம் ஏற்பட்டு இருந்தது.	மெய்மையாய்வுச் சபை பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஊ)	2024 பெப்ரவரி 28 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2004 இன் 11.4 பிரிவின் பிரகாரம் உத்தியோகபூர்வ வாகனங்களைப் பெற்றுக் கொள்வதற்கு தகமை பெற்ற உத்தியோகத்தர் எந்த ஒரு சேவையிலும் ஈடுபடுத்துவதன் கீழ் அரசாங்கத்திற்கு உரிய நிறுவனங்கள் சிலவற்றில் சேவையாற்றிய போதும் அந்த உத்தியோகத்தருக்காக ஒரு மாத்திரம் வழங்கல் வேண்டும். மீளாய்வாண்டின் போது இலங்கை இராணுவத்தால் எரிபொருள் மற்றும் சாரதியுடன் ஆணையாளர் நிர்வாகம் (பணியகம் தலைமையகம்), புனர்வாழ்வு அதிகார சபை சாரங்கா நிலையம் - வவுனியா மற்றும் ஆணையாளர் புனவர்வாழ்வு (பணியகம் தலைமையகம்) என்ற உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் போது புனர் வாழ்வு பணியகத்தாலும் ஒதுக்கப்பட்ட 03 வாகனங்கள் மேற்கூறப்பட்ட உத்தியோகத்தருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும் இந்த 03 வாகனங்களில் ஒரு வாகனம் வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்தமையால் அந்த வாகனத்திற்காக ரூபா 1,196,200 வாடகையாகவும், அந்த ஒட்டுமொத்த 03 வாகனங்களுக்காகவும் எரிபொருள் செலவினமாக ரூபா 3,479,464 தொகையும் செலவிட வேண்டி ஏற்பட்டிருந்தது.	பணியகத்திற்கு உரிய உத்தியோகத்தர்கள் கடமைகளின் தேவைகளுக்காக மாத்திரம் வழங்கப்பட்டுள்ளது.	பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
கந்தர்காடு, சேனபுர மற்றும் வவுனியா புனர்வாழ்வு நிலையங்களில் கைதிகளுக்காக வசதிகள் வழங்கக் கூடிய அளவில் முறையே 500, 500 மற்றும் 120 ஆக இருந்த போதிலும் 2024 திசெம்பர் 31	நீதிமன்றத்தின் மூலம் நிலையங்களுக்கு அனுப்புதல் குறைவடைந்தமையால் நீதிமன்றத்திற்கு அறிவித்து கைதிகளை அதிக அளவில் புனர் வாழ்வுக்காக அனுப்புமாறு கோரிக்கை	உச்ச அளவில் செயற்திறனாக வளங்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	ஆந் திகதியில் இருந்த கைதிகளின் எண்ணிக்கை முறையே 101, 79 மற்றும் 82 ஆனமையால் மேலும் 858 பேர்களுக்காக வசதிகள் வழங்கக் கூடியதாக இருந்தமையால் நிலையங்களில் மனித மற்றும் பௌதீக வளங்கள் உச்ச அளவில் பயன்படுத்தப்படாது இருந்தமை அவதானிக்கப்பட்டது.	விடப்பட்டுள்ளது.	

3.3 பெறுகை முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1(ஆ) இன் பிரகாரம் ரூபா 500,000 இனை விஞ்சுகின்ற பொருட்கள் சேவை ஒப்பந்தங்களுக்காக முறையான ஒப்பந்த உடன்படிக்கை எழுதி கைச்சாத்து இடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் புனர்வாழ்வு நலனாளிகளுக்காக ரூபா 2,860,000 பெறுமதியான கறுப்பு நிறத்தை உடைய 1100 நீளக் காற்சட்டைகள் கொள்வனவு செய்தல் மற்றும் ரூபா 1,374,825 பெறுமதியான தொழிற் பயிற்சிகளுக்கு தேவையான உபகரணத் தொகுதிகள் 15 இனை கொள்வனவு செய்வதற்காக அவ்வாறு முறையான ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டிருக்கவில்லை.	சகல பொருட்களும் உரிய பிரகாரம் குறித்துரைத்த அளவில் கிடைத்த பின்னர் மாத்திரம் உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதுடன் 2025 மே 25 முதல் எல்லையினை விஞ்சுகின்ற சகல கொள்வனவுகளுக்காவும் உடன்படிக்கை கீழ் கட்டளை விநியோகிக்கப் பட்டுள்ளது.	பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	புனர்வாழ்வு நலனாளிகளுக்காக கறுப்பு நிறத்தை உடைய 1,100 காற்சட்டைகள் கொள்வனவு செய்யும் பெறுகைகளுக்காக ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனத்திற்கு ரூபா 2,860,000 தொகையில் பெறுகை கையளிக்கப்பட்டதுடன் உள்நாட்டு ரீதியில் பொருட்களை வழங்குவதற்காக கூறுவிலைகள் சமர்ப்பித்து இருந்த சகல கேள்விதாரர்களினதும் கூட்டுப் பெறுமதியின் அடிப்படையில் வரிக்காக பதிவு செய்திருக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு இல்லையாயின் வர்த்தமாணி அறிவித்தலின்	எதிர்காலத்தில் வற் வரி விடுவிப்புக் கடிதம் மற்றும் நிறுவனம் பதிவு செய்துள்ள சட்டத்தில் சமர்ப்பித்தல் கட்டாயமாக வற் கூறு விலை ஆவணங்களில் குறிப்பிட்டு அவ்வாறு இல்லையாயின் அந்த நிறுவனம் மதிப்பீட்டிற்காக புறக்கணிக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.	உரிய சட்டங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	பிரகாரம் இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தால் உறுதிப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் பெயரில் பெறப்பட்ட சான்றிதழின் நிழற்பட பிரதி சமர்ப்பிக்க வேண்டுமென கேள்வி ஆவணத்தில் குறிப்பிட வேண்டியிருந்த போதிலும் தெரிவு செய்யப்பட்ட நிறுவனம் தொடர்பாக அதன் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		

3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**முகாமைத்துவத்தின் கருத்துரை**	**பரிந்துரைகள்**
(அ)	பணியகத்தின் அங்கீகாரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 267 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 65 ஆனமையால் வெற்றிடங்கள் 202 ஆகக் காணப்பட்டது. இதன் போது சிரேஸ்ட நிலையில் வெற்றிடங்களின் எண்ணிக்கை 10 உம், மூன்றாம் நிலையில் 41 உம், இரண்டாம் நிலையில் 105 உம் மற்றும் ஆரம்ப நிலையில் 46 உம் ஆக வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இராணுவ துணை உத்தியோகத்தர்கள் 46 பேர் மற்றும் முப்படையில் துணை படையினர் 361 பேர்களாக கூட்டமொத்தமாக 407 பேர் நியமிக்கப்பட்டிருந்தனர். இதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் வெற்றிடங்களின் எண்ணிக்கை விஞ்சி 205 பேர்கள் பாதுகாப்பு அமைச்சில் இருந்து நியமிக்கப்பட்டிருந்தனர்.	வெற்றிடங்களுக்காக நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளும் வரை பாதுகாப்பு அமைச்சில் இருந்து நியமிக்கப்பட்டது விரிவுரைக் கடமைகளுக்காக வெளிவளவாளர்கள் சேவை பெறப்பட்டிருந்தது.	வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	புனர்வாழ்வு நிலையங்களில் கடமைகளுக்காக இராணுவ உத்தியோகத்தர்கள் மற்றும ஏனைய படையினர் 358 பேரை விடுவிப்பதற்காக பாதுகாப்பு அமைச்சின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த எண்ணிக்கையை விஞ்சி இராணுவ உத்தியோகத்தர் மற்றும் ஏனைய படையினர் 49 பேர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.	இராணுவத்தில் காணப்படுகின்ற கொள்கை மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் இராணுவ சிரேஸ்ட உத்தியோகத்தர்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஏனைய உத்தியோகபூர்வ பதவியணிகள் 71 பேர்கள் பணியகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.	அங்கீகாரத்தின் கீழ் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ)	பாதுகாப்பு அமைச்சில் இருந்து நியமிக்கப்பட்ட பதவியணியினரை தலைமையக பணியகத்திற்காக எழுது வினைஞர் கடமைகளுக்காக 83 பேரும், பொதுக் கடமைகளுக்காக 37 பேரும் நியமித்தலின் தேவை கணக்காய்வில் தெளிவுபடுத்தப்பட வில்லை.	ஆளுகைச் சபையின் கவனத்திற்கு அனுப்பப்பட்டள்ளதுடன் பதவியணியினர் தொடர்பாக மீண்டும் ஆய்வு செய்யப்படும்.	அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக நியமித்தல் வேண்டும்.
(ஈ)	பாதுகாப்பு அமைச்சின் மூலம் விரிவுரைக் கடமைகளுக்காக 15 உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய படையினர் 35 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் ஆண்டில் வெளிவாரி விரிவுரை உத்தியோகத்தர்களுக்காக ரூபா 31,045,395 செலுத்தப்பட்டிருந்தது.	ஆட்சேர்ப்பதற்கு அங்கீகாரம் கிடைக்காமையினால் வெளி விரிவுரையாளர்கள் சேவை பெறப்பட்டிருந்தது.	பதவியணியினரை சேர்ப்பதற்கும், நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களிடம் இருந்து சேவையைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	சுகாதார அமைச்சில் இருந்து நியமித்ததன் கீழ் மருத்துவ உத்தியோகத்தர் 03 பேர், தாதி உத்தியோகத்தர்கள் 06 பேர் மற்றும் மருந்தாளர்கள் 03 பேர்களாக கூட்டுமொத்தமான 12 பேர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரை அந்த பதவியணியினரை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	சுகாதார அமைச்சில் பதவியணியினர் பற்றாக்குறை காணப்படுகின்றமையால் சுகாதார அமைச்சில் இருந்து நியமிக்கப்பட வில்லை.	அங்கீகரிக்கப்பட்ட பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.